தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1970 மார்ச் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Police Officers—Simpson Group Companies Security staff—Clash.

* 209 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Police Officers of Madras City came to clash with security staff of Messrs. Simpson Group of Companies Limited, Madras City about the 4th July, 1969;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 4-7-69 அன்று திருவல்லிக்கேணி காவல் நிலையத்தைச் சேர்ந்த அடிஷனல் சப்-இன்ஸ்பெக்டர் இயல்பான உடையிலிருந்த ஒரு காவலருடன், வெளியே செல்லும் வாயில் வழியாக சிம்ப்ஸன் கம்பெனிக்குள் நுழைந்தார். அவர்கள் நுழைந்ததை வாயிற்காப்போர் ஆட்சேபித்தார். சப்-இன்ஸ்பெக்டருக்கும் வாயிற்காப்போர் மற்றுமுள்ள சில தொழிலாளர்கள் ஆகியோருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. வாயிற்காப்போரும் அடிஷனல் சப்-இன்ஸ் பெக்டரும் சிறு காயமுற்றனர். அதற்காக அவர்களுக்கு மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

(உ) இது பிடியாணை வேண்டாக் குற்றமாகையால், நீதிமன்றத்தில் முறையிட்டுக் குறை தீர்த்துக் கொள்ளுமாறு வாயிற்காப்போருக்குக் கூறப்பட்டது. அடிஷனல் சப்-இன்ஸ்பெக்டர்மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு டி1. திருவல்லிக்கேணி காவல் நிலயத்திலிருந்து அவர் உடனடியாக மாற்றப்பட்டார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கவேண்டிய ஒரு காவல் துறை அதிகாரி இதுமாதிரி குற்றத்தைச் செய்ததற்காக அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டியிருக்க, அவரை வேறொரு ஸ்டேஷனுக்கு மாற்றிவிட்டால் போதுமா? அவர் மீது

அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? இனிமேலாவது அம்மாதிரி நடக்காமலிருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவரை எச்சரிக்கும் வகையில் அவர் மாற்றப்பட்டிருக்கிறார். அவர் செய்த செயலும் கண்டிக்கப் பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, காவல் துறையில் இருக்கும்படியான இப்படிப்பட்ட அதிகாரிகள் பஸ்ஸிலே தங்களுக்கு டிக்கட் கொடுக்கவில்லை என்பதற்காகக்கூட தொழிலாளர்களை அச்சுறுத்துவதாகப் பல செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. இது சம்பந்தமாக ஏதாவது உறுதியான உத்தரவைப் பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி ஏதாவதொரு தெளிவான விஷயத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுதி யனுப்புவாரானால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

திரு. கே. விநாயகம்: அங்கு வாயிலில் இருந்த சிம்ப்ஸன் கம்பெனி உத்தியோகஸ்தருக்கும் நம்முடைய காவல்துறையில் இருக்கும் சப்-இன்ஸ்பெக்டருக்கும் ஏற்கெனவே ஏதாவது விரோதம் இருந்ததா? அந்தச் சம்பவம் எப்படி நடந்தது? கைகலப்பிற்கு என்ன காரணம்? அந்த சப்-இன்ஸ்பெக்டரை வேறு இடத்திற்கு மாற்றுவது அவ்வளவு போதிய அளவுக்குக் கொடுக்கப் படுகிற தண்டனை அல்ல என்று யான் கருதுகிறேன். இதுமாதிரி யான ஒரு நிகழ்ச்சி ஏதோ ஒரு நாள் உங்கள் கவனத்திற்கும் எங்கள் கவனத்திற்கும் வருகிறது. ஆனால், இதுபோல் எங்கு பார்த்தாலும் நடப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர் மீது சென்ஷரே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தண்டனை போதுமானதல்ல என்று 'யான்' கருதுவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது போதுமானது என்று யாம் கருதுகிறோம். (சிரிப்பு)

ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பணியாளர்கள் ஊதியம்

*210 வினா—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநில அரசைச் சேர்ந்த பெரிய மருத்துவமனைகளிலுள்ள லேபரட்டரி டெக்னிஷியன்களுக்கும் (Laboratory Technicians) மத்திய அரசைச் சேர்ந்த மருத்துவமனைகளிலுள்ள லேபரட்டரி டெக்னிஷியன்களுக்கும் ஊதியத்தில் வேறுபாடு இருப்பது அரசினருக்குத் தெரியுமா?

(இ) இந்த ஊதிய வேறுபாட்டைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா?